DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.சுபக்குமார் | Father/Husband Name : தேவையன் |
| Age : 55 | Village : திண்டுக்கல் |
| Taluk : | Calling : காவல் துணை கண்காணிப்பாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 24, 2026 12:25 PM

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் மாவட்ட குற்ற ஆவணக்கூடத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு 2019 ம் வருடம் சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் வட்டக் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 26.10.2019 ம் தேதி இரவு 09.00 மணியளவில் கீழக்காந்தி நகரை சேர்ந்த சேர்மராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை நிலையத்தில் ஆஜரில் இருந்த சார்பு ஆய்வாளர் சதீஷ்குமார் என்பவர் பெற்று புகாரின் தன்மைகேற்ப காவல்நிலைய குற்ற எண் 558/2019 பிரிவுகள் 279, 304(A) இ.த.ச ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடத்திற்கு 22.00 மணிக்கு சென்று சாட்சிகள் மாரியப்பன், வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் வாங்குமூலத்தையும் பெற்றுள்ளார். கூடுதல் சாட்சிகளாக சேர்மராஜ், பசுபதி, மாரிமுத்து ஆகியோர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. 27.10.2019 ம் தேதி காலை 08.00 மணியளவில் சாத்தூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் இவ்வழக்கில் இறந்துபோன கருப்பசாமி என்பவர் உடல் மீது பிரேத விசாரணை செய்யவேண்டி சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்து, அவர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். மேலும் இறந்துபோன நபரின் பிரேதத்தை தலைமை காவலர் 1874 சரவணன் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் கணேசன், பாண்டியம்மாள், ஆகியோர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

4. இவ்வழக்கின் தொடர் புலன் விசாரணைக்காக வழக்கு நாட்குறிப்பினை எனது விசாரணைக்கு 03.11.2019 ம் தேதி அனுப்பியதை பெற்றுக்கொண்ட நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்ய சார்பு ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் புகார்தாரரனா சேர்மராஜ் மட்டும் விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற தலைமை காவலர் சரவணன், புகாரினை பெற்று வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் சதீஷ்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.02.24 07:12:45 +0530

*24.02.2026.*

5. இவ்வழக்கின் எதிரியான மதுரை, திருப்பாலையை சேர்ந்த பாலக்குமாரை விசாரித்து இவ்வழக்கின் எதிரியான மேற்படி நபரை காரணம் கூறி காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தி இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். அந்த சமயத்தில் மேற்படி பாலக்குமார் தனது வாகனத்தின் ஆவணங்களை எனது விசாரணைக்கு ஆஜர் செய்ததை பெற்றுக்கொண்டேன்.

6. 04.11.2019 ம் தேதி இவ்வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட TN 04 A 3370 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஆல்டோ நான்கு சக்கர வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்து, அதை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கலைச்செல்வி என்பவரை 25.11.2019 ம் தேதி விசாரணை செய்து அவர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். **(மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. இந்த வழக்கு விபத்தில் காயம்பட்ட கருப்பசாமி என்பவரின் விபத்து பதிவேடு பதிவு செய்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் செந்தில்கணேஷ் என்பவரை விசாரித்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டை கிடைக்கப்பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். **(காயம்பட்ட நபருக்கு 26.10.2019 ம் தேதி சாத்தூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இறந்துபோன நபரின் உடலை சடலக்கூராய்வு செய்த மருத்துவர் ஆதில் முகமது என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய சடலக்கூராய்வு அறிக்கை கிடைக்கப்பெற்று மருத்துவரின் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். **(சடலக்கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

8. இவ்வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளரான சுசீலா என்பவரை விசாரித்து அவரின் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். அவர் என்னுடைய விசாரணையின் போது மேற்படி வாகனத்தினை இந்த வழக்கு எதிரி பாலக்குமாருக்கு விற்பனை செய்துவிட்டதாக கூறி வாக்குமூலம் கொடுத்தார்.

9. நான் என்னுடைய புலன் விசாரணையை முடித்து என்னுடைய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் எதிரி தன்னுடைய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று வழக்கு விபத்தை ஏற்படுத்தி கருப்பசாமி என்பவருக்கு இறப்பை ஏற்படுத்திய குற்றம் உண்மை என தெரியவந்ததால் எதிரி பாலக்குமார் மீது 25.11.2019 ம் தேதி இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A) ன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

10. இந்த வழக்கு விபத்து சாத்தூர் – கோவில்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் வைத்து நடைபெற்றது என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் அருகே இருந்ததாக கூறப்படும் SSS காம்ப்ளக்ஸ் தேசிய நெடுஞ்சாலையின் மேற்குப் பக்க அணுகு சாலைக்கு மேற்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். வெள்ளைக்கரை சாலைக்கு செல்லக்கூடிய சாலை நான்கு வழிச்சாலைக்கு கிழக்கு பக்கம் இருக்கக்கூடிய அணுகு சாலைக்கும் கிழக்கே இருக்கிறது என்றால் சரிதான். SSS காம்ப்ளக்ஸில் இருந்து வெள்ளக்கரை சாலை எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது என்றால் சுமார் 150 அடி தொலைவில் அமைந்துள்ளது.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.02.24 07:12:52 +0530

11. மேற்படி நான்கு வழி சாலையின் மேற்கு பக்கத்தில் இருந்து வெள்ளக்கரை சாலைக்கு வர வேண்டும் என்றால் வைப்பாறு பாலம் வழியாகத்தான் வரவேண்டும் என்றால் சரிதான், அந்த ரோட்டில் அனைத்து வாகனங்களும் சென்றுவரும், வழக்கு விபத்து சமயத்தில் நான்கு வழி சாலையின் இரு பக்கத்திலும் தடுப்புக் கம்பிகள் அமைக்கப்படவில்லை என்பதால் சாலையை நடந்து கடக்கும் பொதுமக்கள் நான்கு வழிச்சாலை வழியாக இருபுறமும் (கிழக்கு – மேற்கு) செல்வார்கள். பொதுமக்கள் நான்கு வழிச்சாலையை கடப்பதற்காக நெடுஞ்சாலைத் துறையால் அந்த இடத்தில் பாதை எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான்.

12. என்னுடைய விசாரணையில் சாட்சி சேர்மராஜ் அவரும் அவருடைய நண்பர் மாரிமுத்து என்பவரும் 26.10.2019 ஆம் தேதி இரவு சுமார் 07.15 மணியளவில் சாத்தூர் வெள்ளைக்கரை சாலையில் உள்ள SSS காம்ப்ளக்ஸ் முன்பாக நின்று பேசிக் கொண்டிருந்தார் என்று கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். என்னுடைய விசாரணையில் சாட்சி சேர்மராஜ் அவரும் அவருடைய நண்பர் மாரிமுத்துவும் 26.10.2019 ஆம் தேதி இரவு 7:20 மணிக்கு சாத்தூர் வெள்ளைக்கரை ஜங்ஷனில் நின்று பேசிக் கொண்டிருந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

13. அ.சா.2 பசுபதி என்னுடைய விசாரணையில் 26.10.2019 ஆம் தேதி இரவு சுமார் 07:00 மணி முதல் 07.20 மணி வரை இருக்கும்போது வெள்ளக்கரை சாலையில் நின்று மாரிமுத்து மற்றும் சேர்மராஜ் ஆகியோருடன் பேசிக் கொண்டிருந்ததாக கூறியுள்ளாரா என்றால் அவர் எங்கு நின்று பேசிக் கொண்டிருந்தார் என்பது தொடர்பாக குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை. மேற்படி பசுபதி என்னுடைய விசாரணையின் போது எதிரி ஓட்டி வந்த கார் கருப்பசாமியின் மீது மோதியதால் கருப்பசாமி காரின் இடது பக்க கண்ணாடியில் மோதி விழுந்தார் என்று கூறியுள்ளாரா என்றால் காரின் இடது பக்க கண்ணாடியில் விழுந்தது பற்றி சாட்சி கூறவில்லை. அதேபோல், பசுபதி என்னுடைய விசாரணையின் போது எதிரி ஓட்டி வந்த காரை நிறுத்தியதாகவும், எதிரியும் காரினை நிறுத்திவிட்டார் என்றும் கூறியுள்ளாரா என்றால் இல்லை.

14. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்தில் இறந்து போன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்லை. நான் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னால் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

24 Feb 2026 13:12

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.02.24 07:12:59 +0530

Judicial Magistrate 2, Sattur